**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I
8069872

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் Kanchipuram   PS: காவல்நிலையம் Vigilance & Anti-corruption   Year: ஆண்டு 2020   FIR No.: மு.த.அ. எண் 8/AC/2020/KM   Date: நாள் 28.11.2020 at 04.30hrs

2. (i) Act சட்டம்: IPC   Sections பிரிவுகள்: U/s 120(b) IPC
(ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: the prevention of corruption Act-2018   Sections பிரிவுகள்: and 7 of PC Act.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 27/28/11/2020   Date to : நாள் வரை
Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 19.30hrs   Time to : நேரம் வரை 02.00hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.11.2020   Time : நேரம் 04.30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.11.2020   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Deputy Director, District Town and Country Planning office, Kottampalayam Street, Kanchipuram, 3KM, EAST.
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் –   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. J. Yogajothi   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Special Deputy collector, Dt. Inspection cell officer (I/c) Kanchipuram & Tiruvallur Chengalpattu. @ Kanchipuram.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 33   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்   (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Accused. (1) Tmt. P. Kavitha, A/40, W/o Saravana, Deputy Director, Dt. Town & Country Planning office, Kanchipuram District. (2) Tr. K. Arunkumar A/32 (Broker) S/o Kamalakkannan, 199/232, Anna Salai, Chengalpattu Dt. (3) Tr. S. Sureshkumar A/42 (Broker) S/o Satchidhanantham, No.1 Saravana Street, T.Nagar, Chennai-17 (4) Tr. V. Kathiravan, A/25 (Broker), S/o Veerapathiran, No.1/114 West Street, Avalikkadu, Vedharanyam, Nagapatinam Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
During surprise check unaccounted money of Rs. 3,90,600/- was Seized. (Attach Separate sheet if reccuy)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

— Separate Sheet Enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........R. Geetha........ Rank .....Inspector..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......VVAC / Kanchipuram.......of Police.......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) Inspector 28/11/2020

15. Date & Time of despatch to the court: 28/11/2020, 06.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ........R. Geetha........
Rank: நிலை ....Inspector of Police....No. எண் ..........
VVAC Kanchipuram.

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

**Submitted,**

| | |
|---|---|
| **Accused:**<br><br>1)Tmt.P.Kavitha, Age-40<br>W/o. Saravana,<br>Deputy Director,<br>District Town & Country Planning Office,<br>Kanchipuram Dist.<br><br>2) Tr.K.Arunkumar, Age-32, (Broker)<br>S/o. Kamalakannan,<br>No.199/232, Anna Salai, Chengalpattu,<br>Chengalpattu District.<br><br>3) Tr.S.Sureshkumar, Age- 42, (Broker)<br>S/o. Satchidanantham,<br>No.1, Saravana Street, T.Nagar,<br>Chennai-17.<br><br>4)Tr.V.Kadhiravan, Age-25, (Broker)<br>S/o. Veerapathiran,<br>No.1/114, West Street, Avalikkadu,<br>Vedharanyam, Nagapattinam District. | இன்று 28.11.2020-ம் தேதி காலை சுமார் 04.30 மணிக்கு காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, காஞ்சிபுரம் திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்கள் (இருப்பு) காஞ்சிபுரம் (கூ.பொ) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.ஜெ.யோகஜோதி, தனி துணை ஆட்சியர் (சபாதி) அவர்களின் கடித ந.க.361/2020, நாள்.28.11.2020-ன்படி காவல் துணைக் கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காஞ்சிபுரம் அவர்களிடம் கொடுத்த அறிக்கையினை பெற்று அதன் மீது வழக்கு பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்குமாறு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எனக்கு உத்தரவு பிறப்பித்ததின்படி நான் வழக்கு பதிவு செய்த விவரம் பின்வருமாறு/ பார்வை |

செயல்முறைகள், ந.க.எண்/ 361/2020, நாள் 27.11.2020. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகத்தில் பொதுமக்கள் அவர்களது மனை பிரிவு அனுமதி, கட்டிடம் கட்ட அனுமதி மற்றும் நில வகைப்பாடு சம்மந்தமாக வருபவர்களிடம் அவர்களது தேவையான பணிகளை செய்வதற்கு அந்த அலுவலகத்தில் துணை இயக்குநர் மற்றும் அலுவலர்கள் அதிகப்படியான லஞ்சப் பணம் புரோக்கர் மூலம் வசூலிப்பதாக கிடைத்த தகவலின் பேரிலும், அது இல்லாமல் பொது மக்களின் தேவையான அனுமதி பெறுவதற்கு அவர்களை புரோக்கர்கள் மூலமும், துணை இயக்குநருக்கு தெரிந்தவர்கள் மூலம் வந்தால் மட்டுமே வேலை நடக்கும் என்றும் அப்படி இல்லையென்றால் அவர்களது வேலைகள் முடிக்காமல் மாதக்கணக்கில் காலம் கடத்தி வருவதாகவும் தொடர்ந்து எனக்கும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிக்கும் கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில், இன்று 27.11.2020-ம் தேதி இரவு சுமார் 07.30 மணி முதல் இன்று 28.11.2020-ந்தேதி அதிகாலை சுமார் 02.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது.

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

மேற்குறிப்பிட்ட இந்த ஆய்வின்போது திரு.க.அருண்குமார், வ-32, த/பெ. கமலக்கண்ணன், எண்.199/232, அண்ணாசாலை, செங்கற்பட்டு ‡ மாவட்டம் என்ற புரோக்கரிடமிருந்து ரூ.28,900/-ம் பணத்தை அவரது பேன்ட் பாக்கெட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது. அவர் கடந்த 12 வருடங்களாக இந்த வேலையில் புரோக்கராக செய்வதாகவும், துணை இயக்குநரை செங்கற்பட்டில் பணிபுரிந்த போதே தெரியும் என்றும், அப்போதிலிருந்தே தொடர்ந்து அவருக்கு உதவியாக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், அவர் அலுவல் வேலையாக வெளியில் செல்லும் இடங்களுக்கு உதவியாக நான் உடன் செல்வேன். அவர் குறிப்பிடும் நபர்களிடமிருந்து பணம் வாங்கிக்கொள்ளுமாறு கூறியனுப்புவர்களிடமிருந்து பணத்தை பெற்று வைத்திருப்பேன் என்று வாக்குமூலம் கொடுத்தார். அதேபோல், திரு.S.சுரேஷ்குமார், வ-42, த/பெ. சச்சிதானந்தம், எண்.1, சரவணா தெரு, டி.நகர், சென்னை-17 என்ற புரோக்கரிடமிருந்து ரூ.1,61,700/-ஐ அவர் வைத்திருந்த கறுப்பு நிற காலேஜ் பேக்கில் இரண்டு பிரௌன் கவர்களில் ரூ.1,00,000/-மும், மற்றொரு கவரில் ரூ.61,700/-ம் வைத்திருந்தார். மேற்படி அலுவலகத்தில் துணை இயக்குநர் அவர்களை Volmnus Developers கம்பெனியின் கூடுதல் கட்டிடம் கட்டுவது சம்மந்தமாக அனுமதி வேண்டி வந்ததாகவும் (ந.க.எண்.16628/2020/சிபி. நாள்-19.11.2020) அவர் வைத்திருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் ஏதும் கூறாததால், அப்பணத்தை லஞ்சப்பணம் என்று கருதி கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட அலுவலகத்தை தரை மற்றும் முதல் தளங்களில் சோதனை செய்தபோது, தரைதளத்தில் துணை இயக்குநர் அவர்களின் அறை கதவின் அருகில் 1 கொரியர் கவரை சுருட்டி போடப்பட்டிருந்ததை எடுத்து பார்த்தபோது, அவற்றில் 500 ரூபாய் நோட்டுகளாக ரூ.2 லட்சம் பணம் இருந்தது. அதுகுறித்து துணை இயக்குநர் திருமதி.கவிதா அவர்களிடம் விசாரித்தபோது தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். பின்னர், ஆஜரில் இருந்தவர்களை விசாரித்தபோது, திரு.கதிரவன் என்பவர் அந்த கவரை கீழே போட்டதாக தெரிவித்தார். கதிரவனை விசாரித்தபோது, முதலில் தெரியாது என்று கூறியவர் பின்னர், அவர் ஒரு லைசென்ஸ் சர்வேயர் என்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் செங்கற்பட்டு மற்றும் காஞ்சிபுரம் அலுவலகத்திலும் புரோக்கராக செயல்படுவதாகவும், மேலும், திருமதி.கவிதா அவர்களை செங்கற்பட்டில் பணிபுரிந்தபோதே தெரியும் என்றும், அதனால் திருமதி.கவிதா அவர்களே என்னை இந்த அலுவலகத்திற்கு வருமாறும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரும் அலுவலகத்திற்கு வருவதாகவும், அதேபோல், இன்று இந்த அலுவலகத்தில் இருந்தபோது, மாலை சுமார் 06.30 மணியளவில் இரண்டு பார்ட்டிகள் காரில் வந்ததாகவும், அவர்களிடம்

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

ஏதோ பணம் திருமதி.கவிதா கேட்டதாகவும். அவற்றை அந்த பார்ட்டிகள் கொடுக்க வந்தபோது, என்னை உள்ளே அழைத்து என்னிடம் கொடுக்குமாறு கூறியதால், அவர்கள் என்னிடம் அந்த கொரியர் கவரில் கொடுத்ததை நான் வாங்கி வைத்திருந்தேன். அப்பணத்தை துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து கிளம்பி செல்லும்போது, வெளியில் ஏதாவது ஒரு இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு, என்னையும் மற்றவர்களையும் தகவல் தெரிவித்து வரவழைத்து பணத்தை பெற்றுக்கொண்டு செல்வது வழக்கம். அதுபோலத்தான் இன்றும் நான் பணம் வாங்கி வைத்திருந்தேன். ஆனால், அவர் வெளியில் சென்ற சிறிது நிமிடத்திற்குள் திரும்பி அலுவலகத்திற்கு உள்ளே வரவே, அவருடன் விஜிலென்ஸ் போலீசார் வந்ததால் நான் பயந்துகொண்டு பணப்பொட்டலத்தை திருமதி.கவிதா அவர்களின் அறைக்கதவின் அருகில் தூக்கி போட்டுவிட்டேன். அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அது லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என்று கருதி கைப்பற்றினேன். இது சம்மந்தமாக அலுவலக ஆஜரில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனி நபர்கள், புரோக்கர்களை விசாரித்து வாக்கு மூலங்களை பதிவு செய்தேன். அதேபோல், திருமதி.கவிதா அவர்களும் அவர் தரப்பு விளக்கத்தை எழுத்துமூலமாக எழுதி கொடுத்தார்கள். இதிலிருந்து திருமதி.கவிதா, துணை இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்கள் புரோக்கர்கள் மூலம் லஞ்சப்பணத்தை வசூல் செய்து, வெளியில் வரச்சொல்லி அவற்றை பெற்றுக்கொண்டு போவதை வழக்கமாக கொண்டுள்ளார் என தெரிய வருகிறது. அதனால், பொதுமக்களின் சேவைக்காக, திருமதி.கவிதா அவர்கள் தனி நபர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலம் லஞ்சப்பணத்தை கேட்டு, அவற்றை அலுவலகத்திற்கு வெளியே பெற்று செல்வது உறுதியானதால், அவர் மீதும், அவருக்கு உடந்தையாக இருந்த புரோக்கர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ள இந்த கடிதத்தை தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம்Xxxxx (திருமதி.ஜெ.யோகஜோதி), தனித்துணை ஆட்சியர் (சபாதி), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (கூ.பொ), காஞ்சிபுரம், திருவள்ளூர் ஃ செங்கற்பட்டு மாவட்டங்கள், (இருப்பு) காஞ்சிபுரம். <u>இணைப்பு</u> -1) செயல்முறைகள் ந.க.எண்:- 361/2020, நாள் 27.11.2020 (அசல்), 2) ரொக்கப்பணம் ரூ. 3,90,600/-, 3) சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளின் நகல்கள், 4) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக ஆஜரில் இருந்த 6 அலுவலர்களின் தனி அறிக்கை, மற்றும் அவர்களது வாக்குமூலங்கள், 5) 8 தனிநபர்களின் வாக்குமூலங்கள் ஆகிவற்றை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடமிருந்து பெற்று, அதன்மீது மேல்நடவடிக்கை

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

எடுக்கவேண்டி Inspr R.Geetha for n/a and register a case sd.xxx K.V.Kalaiselvam, DSP,V&AC,KPM dated 28.11.2020. மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் விவரம் வருமாறு. காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறைகள் (கூடுதல் பொறுப்பு).முன்னிலை- திருமதி.ஜெ.யோகஜோதி. தனித்துணை ஆட்சியர்(சபாதி) ந.க.எண்:- 361/2020, நாள்:- 27.11.2020. பொருள்:- திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காஞ்சிபுரம் - துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் - திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. ஆணை:- காஞ்சிபுரம் மாவட்டம், இரங்கசாமி குளம் அருகில் எண்.33ஜ/95, கோட்ராம்பாளையம் தெருவில் வாடகைக்கு அமைந்துள்ள காஞ்சிபுரம் துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில், பொதுமக்கள் அவர்களது மனை பிரிவு அனுமதி, கட்டிடம் கட்ட அனுமதி மற்றும் நில வகைப்பாடு சம்மந்தமாக வருபவர்களிடம் அவர்களது தேவையான பணிகளை செய்வதற்கு அந்த அலுவலகத்தில் துணை இயக்குநர் மற்றும் அலுவலர்கள் அதிகப்படியான லஞ்சப் பணம் புரோக்கர் மூலம் வசூலிப்பதாக கிடைத்த தகவலின் பேரிலும், அது இல்லாமல் பொது மக்களின் தேவையான அனுமதி பெறுவதற்கு அவர்களை புரோக்கர்கள் மூலமும், துணை இயக்குநருக்கு தெரிந்தவர்கள் மூலம் வந்தால் மட்டுமே வேலை நடக்கும் என்றும் அப்படி இல்லையென்றால் அவர்களது வேலைகள் முடிக்காமல் மாதக்கணக்கில் காலம் கடத்தி வருவதாகவும் தொடர்ந்து எனக்கும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிக்கும் கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில், இன்று 27.11.2020-ம் தேதி இரவு சுமார் 07.30 மணி முதல் இன்று 28.11.2020-ந்தேதி அதிகாலை சுமார் 02.00 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் வருமாறு. இன்று 27.11.2020-ந்தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் இரு துறை தணிக்கையாக காஞ்சிபுரம் இரங்கசாமி குளம் அருகில் உள்ள கோட்ராம்பாளையம் தெருவில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட அலுவலகத்தினை பார்ட்டி சகிதம் ஆங்காங்கே கண்காணித்துக்கொண்டிருந்தபோது, உள்ளேயிருந்து துணை இயக்குநர் திருமதி.கவிதா அவர்கள் அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தபோது, MG Hector TN 19AR 6999 என்ற சிவப்பு நிற நான்கு சக்கர வாகனம் அலுவலகத்திற்கு வெளியே வந்து நின்றது. அதில் திருமதி.கவிதா அவர்கள் அந்த காரில் ஏறி கார் புறப்பட்டு, சிறிது நகர்ந்தபோது, பார்ட்டி சகிதம் எதிரே நின்று மடக்கி விசாரித்ததில், ஓட்டுநருக்கு பின்னால் இடதுபுறம்

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

அமர்ந்திருந்தவர், தான் துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரிவதாக தெரிவித்தார். அவருக்கு பக்கத்தில் திரு.க.அருண்குமார், வயது-32, த/பெ. கமலக்கண்ணன், எண்.199, அண்ணாசாலை, செங்கற்பட்டு மற்றும் மாவட்டம் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை யார் என்று விசாரித்தபோது, அவர் அந்த காரின் ஓனர் என்று கூறினார். மற்றும் கார் ஓட்டுநர் குறித்து விசாரித்தபோது, அவர் பெயர் திரு.சி.காளிமுத்து, வயது-27, த/பெ. சிங்காரவேலு, எண்.102பி. பெரிய செட்டித்தெரு, செங்கற்பட்டு ‡ மாவட்டம் என்று தெரிவித்தார். அவர் அருண்குமாருக்கு ஓட்டுநராக பணிபுரிவதாக தெரிவித்தார். அதனால் மூவரையும் அழைத்துக்கொண்டு நான், பெண் காவல் ஆய்வாளருடன் அலுவலகத்திற்கு உள்ளே அழைத்து வரப்பட்டு அவரது இருக்கையில் அமர வைக்கப்பட்டார். பின்னர் அலுவலகத்தினை பார்வையிட்டதில் அலுவலகம் கிழக்கு பார்த்த வாசலை கொண்டும், தரைதளம் மற்றும் முதல் தளம் என இருந்தது. அந்த அலுவலகத்தில் மொத்த பணியாளர்கள் 16 பேர்கள் என்றும், அதில் தற்பொழுது தரைதளத்தில் 3 பேர்களும், மேல்தளத்தில் 3 பேர்கள் என வீட்டிற்கு போனவர்கள் போக மொத்தம் 6 பேர்கள் அலுவலர்கள் இருந்தனர். மேலும், அலுவலக போர்டிகோவில் TN 01 AG 2121 என்ற வெள்ளை நிற அம்பாசிடர் கார் நின்றுக்கொண்டிருந்தது. அலுவலகத்திற்கு உள்ளே வரும்போது தனிநபர்களும் இருந்தனர். மேலும், துணை இயக்குநர் திருமதி.கவிதா அவர்களிடம் என்னையும், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கலைசெல்வம், காவல் ஆய்வாளர்கள் திரு.அண்ணாதுரை, திருமதி.தமிழரசி, திருமதி.கீதா, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் மற்றும் பார்ட்டி சகிதம் அவர்களிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு, அவரவர்களது அடையாள அட்டைகளை காட்டப்பட்டது. மேலும் அனைவரையும் சுயபரிசோதனை செய்து காட்டப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் அனைவரையும் விசாரித்து சோதனை செய்யப்பட்டது. மேலும், அலுவலகத்தின் இரு தளங்களையும் சோதனை செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலர்களின் விவரம் வருமாறு.

| வ. எண். | ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள் | வைத்திருந்த இருப்புத்தொகை | விவரம் |
|---|---|---|---|
| 1. | திருமதி.பு.கவிதா, வ-40, க/பெ. சரவணா, துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், எண்.33ஜ/95, கோட்ரம்பாளையம் தெரு, காஞ்சிபுரம் ‡ மாவட்டம். | ரூ.3,700/- ஹேண்டு பேக்கில் | தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். சென்னை, சின்ன நொலம்பூரலிருந்து வந்து செல்வதால் செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்ததை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

| | | | |
|---|---|---|---|
| 2. | திருமதி.K. சரிதா, வ-38, க/பெ. சிவசங்கர், சூப்பர்வைசர், எண்.94, காந்திபுரம், திருவள்ளூர் மாவட்டம். | ரூ.600/- அவர் வைத்திருந்த ஹேண்ட் பேக்கில் வைத்திருந்தார். | அந்த பணத்தில் அவருக்கு சுகர் மாத்திரை வாங்க மற்றும் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |
| 3. | திரு.N.பாஸ்கரன், வ-50, த/பெ. நாகலிங்கம், வரைவாளர்-நிலை-3, எண்.8, என்.எஸ்.சி போஸ் தெரு, அம்பத்தூர், சென்னை-8 | ரூ.970/- பேன்ட்டில் இருந்த பர்சில் | அவருடைய வீட்டிற்கு செக்கெண்ணெய் வாங்கி எடுத்துச்செல்ல கொண்டு வந்துள்ளதாக கூறியதை ஏற்று அப் பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |
| 4. | திரு.S.விவேக்குமார், வ-28, த/பெ. சுந்தரவேல், வரைவாளர்-நிலை-3, எண்.5, 2-வது தளம், பாபு கார்ட்டன், மேலேரிப்பாக்கம் சாந்திநகர், செங்கற்பட்டு மாவட்டம். | ரூ.460/- பேண்ட் பர்சில் | அவர் வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் அலுவலகத்திற்கு வந்து செல்வதால், பெட்ரோல் செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |
| 5. | திரு.J.சீனிவாசன், வ-32, த/பெ. ஜனார்த்தனன், வரைவாளர்-நிலை-3, எண்.45F-12, பாளையபட்டு தெரு, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம். | ரூ.1,305/-பர்சில் | அவர் திண்டிவனத்திலிருந்து தினமும் அலுவலகத்திற்கு பேருந்தில் வந்து செல்வதால் சாப்பாடு செலவிற்காகவும் மற்ற இதர செலவிற்காகவும் கொண்டு வருவதாக தெரிவித்ததால், அப்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |
| 6. | திரு.கே.தேவராஜ், வ-52, த/பெ. கந்தன், அலுவலக உதவியாளர், அண்ணாநகர், இரயில்வே கேட், வையாவூர் ரோடு, காஞ்சிபுரம் மாவட்டம். | ரூ.420/- சட்டை பாக்கெட்டில் | அவரது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு, அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |

மேலும், அலுவலகத்திற்கு உள்ளே தனிநபர்களும் மற்றும் புரோக்கர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரையும் விசாரித்து, சோதனை செய்தபோது, கீழ் குறிப்பிட்ட விவரங்கள் தெரியவந்தது. அவை,

| **வ. எ ண்.** | **அலுவலகத்தில் இருந்த தனிநபர்களின் விவரம்** | **வைத்திருந்த இருப்புத் தொகை** | **தனி நபர்/ புரோக்கர்** | **வைத்திருந்த பணத்தின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1. | திரு.க.அருண்குமார், வ-32, த/பெ. கமலக்கண்ணன், எண்.199/232, அண்ணாசாலை, செங்கற்பட்டு மாவட்டம். | ரூ.28,900/- | புரோக்கர், | கடந்த 12 வருடங்களாக இந்த வேலையில் புரோக்கராக செய்வதாகவும், துணை இயக்குநரை செங்கற்பட்டில் பணிபுரிந்த போதே தெரியும் என்றும், அப்போதிலிருந்தே தொடர்ந்து அவருக்கு உதவியாக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், அவர் அலுவல் வேலையாக வெளியில் செல்லும் இடங்களுக்கு உதவியாக நான் உடன் |

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செல்வேன். அவர் குறிப்பிடும் நபர்களிடமிருந்து பணம் வாங்கிக்கொள்ளுமாறு கூறியனுப்புவர்களிடமிருந்து பணத்தை பெற்று வைத்திருப்பேன். அவருடைய பேன்ட் பாக்கெட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பணம் ரூ.28,900/-க்கு தகுந்த முகாந்திரம் ஏதும் தெரிவிக்காததால், அப்பணத்தை லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என கருதி கைப்பற்றப்பட்டது. |
| 2. | திரு.S.சுரேஷ்குமார். வ-42, த/பெ. சச்சிதானந்தம், எண்.1, சரவணா தெரு, டி.நகர், சென்னை-17. | ரூ.1,61,700/- | புரோக்கர் | அவர் வைத்திருந்த கறுப்பு நிற காலேஜ் பேக்கில் இரண்டு பிரௌன் கவர்களில் ரூ.1,00,000/-மும், மற்றொரு கவரில் ரூ.61,700/-ம் வைத்திருந்தார். மேற்படி அலுவலகத்தில் துணை இயக்குநர் அவர்களை Volmnus Developers கம்பெனியின் கூடுதல் கட்டிடம் கட்டுவது சம்மந்தமாக அனுமதி வேண்டி வந்ததாகவும் (ந.க.எண்.16628/2020/சிபி, நாள்-19.11.2020) அவர் வைத்திருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் ஏதும் கூறாததால், அப்பணத்தை லஞ்சப்பணம் என்று கருதி கைப்பற்றப்பட்டது. |
| 3. | திரு.வீ.கதிரவன். வ-25, த/பெ. வீரபத்திரன், எண்.1/114, மேற்கு தெரு, அவளிக்காடு, வேதாரண்யம், நாகப்பட்டினம். | ரூ.2,500/- பேன்ட் பாக்கெட்டில் | லைசென்ஸ் சர்வேயர் | அப்பணம் அவருடைய சொந்த செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |
| 4. | திரு.ச.ரவிபிரசாத் வ-26, த/பெ. சங்கர், எண்.193, திடீர் நகர், அம்மையப்பநல்லூர் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். | ரூ.1,000/- பர்சில் இருந்து | பதிவு பெற்ற பொறியாளர். | குன்றத்தூரை சேர்ந்த கண்ணன் என்பவருக்கு தனி மனை வரண்முறைப்படுத்துதல் சான்று பெற வந்ததாகவும் அதற்கு செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவிக்கப் பட்டதால், அதனை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. |

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | திரு.பி.மணிகண்டன், வ-28, த/பெ. பவுல்ராஜ், எண்.16/1, பகத்சிங் தெரு, என்.ஜி.ஓ நகர், காஞ்சிபுரம் டி மாவட்டம். | ரூ.360/-பேண்ட் பாக்கெட்டில் இருந்து | தனி நபர் | Revival Construction company-யில் வேலை செய்வதாகவும், அதன் கட்டிட வரைபட அனுமதிக்காக ஆகும் கட்டணத்தொகை விவரம் அடங்கிய உண்மை நகல் பெறுவதற்காக வந்ததாக தெரிவித்ததை ஏற்று அவரது பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. |
| 6. | திரு.சரவணன், வ-45, த/பெ. பழனி, கார் ஓட்டுநர், எண்.86பி/, 2-வது குறுக்குத்தெரு, கற்பகம் நகர், சேலையூர், தாம்பரம். | -- | கார் ஓட்டுநர் TN 07CM 7818 Innova Car | இவர் வ.எண்.2-ல் உள்ள சுரேஷ்குமாரின் கார் ஓட்டுநர் என்றும் அவருடன் செங்கற்பட்டு மற்றும் காஞ்சிபுரத்திற்கு தினமும் வந்து போவதாகவும், அதுபோல் இன்று அவரை அழைத்துவந்ததாகவும் தெரிவித்தார். |
| 7. | திரு.மோ.அஜித்குமார், வ-23, த/பெ. மோகன், எண். 1038, டேங்க் தெரு, தூசி, நத்தக்கொள்ளை, திருவண்ணாமலை மாவட்டம். | -- | சக்தி பில்டர்ஸ் கடையில் வேலை பார்ப்பதாவும் | இந்த . அலுவலகத்திற்கு ஒட்டியுள்ள சக்தி பில்டர்ஸ் என்ற கடையில் புளூபிரிண்ட் தயாரிக்கும் வேலையை சுமார் 1 மாதமாக வேலை செய்வதாக தெரிவித்தார். |
| 8. | திரு.எஸ்.காளிமுத்து, வ-27, த/பெ. சிங்காரவேலு, எண்.102பி, பெரிய செட்டித்தெரு, செங்கற்பட்டு டி மாவட்டம். | -- | கார் ஓட்டுநர் TN 19AR 6999 MG Hector Car | இவர் அருண்குமார் அவர்களின் காருக்கு டிரைவராக வந்ததாகவும், அவருடன் கிளம்பும்போது அழைத்து வந்ததாகவும் தெரிவித்தார். |

அலுவலகத்தில் சோதனை செய்தபோது, துணை இயக்குநர் அவர்களின் அறை கதவின் அருகில் 1 கொரியர் கவரை சுருட்டி போடப்பட்டிருந்ததை எடுத்து பார்த்தபோது, அவற்றில் 500 ரூபாய் நோட்டுகளாக ரூ.2 லட்சம் பணம் இருந்தது. அதுகுறித்து துணை இயக்குநர் திருமதி.கவிதா அவர்களிடம் விசாரித்தபோது தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். பின்னர், ஆஜரில் இருந்தவர்களை விசாரித்தபோது, திரு.கதிரவன் என்பவர் அந்த கவரை கீழே போட்டதாக தெரிவித்தார். கதிரவனை விசாரித்தபோது, முதலில் தெரியாது என்று கூறியவர் பின்னர், அவர் ஒரு லைசென்ஸ் சர்வேயர் என்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் செங்கற்பட்டு மற்றும் காஞ்சிபுரம் அலுவலகத்திலும் புரோக்கராக செயல்படுவதாகவும், மேலும், திருமதி.கவிதா அவர்களை செங்கற்பட்டில் பணிபுரிந்தபோதே தெரியும் என்றும், அதனால் திருமதி.கவிதா அவர்களே என்னை இந்த அலுவலகத்திற்கு வருமாறும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரும் அலுவலகத்திற்கு வருவதாகவும், அதேபோல், இன்று இந்த அலுவலகத்தில் இருந்தபோது, மாலை

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

சுமார் 06.30 மணியளவில் இரண்டு பார்ட்டிகள் காரில் வந்ததாகவும், அவர்களிடம் ஏதோ பணம் திருமதி.கவிதா கேட்டதாகவும், அவற்றை அந்த பார்ட்டிகள் கொடுக்க வந்தபோது, என்னை உள்ளே அழைத்து என்னிடம் கொடுக்குமாறு கூறியதால், அவர்கள் என்னிடம் அந்த கொரியர் கவரில் கொடுத்ததை நான் வாங்கி வைத்திருந்தேன். அப்பணத்தை துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து கிளம்பி செல்லும்போது, வெளியில் ஏதாவது ஒரு இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு, என்னையும் மற்றவர்களையும் தகவல் தெரிவித்து வரவழைத்து பணத்தை பெற்றுக்கொண்டு செல்வது வழக்கம். அதுபோலத்தான் இன்றும் நான் பணம் வாங்கி வைத்திருந்தேன். ஆனால், அவர் வெளியில் சென்ற சிறிது நிமிடத்திற்குள் திரும்பி அலுவலகத்திற்கு உள்ளே வரவே, அவருடன் விஜிலென்ஸ் போலீசார் வந்ததால் நான் பயந்துக்கொண்டு பணப்பொட்டலத்தை திருமதி.கவிதா அவர்களின் அறைக்கதவின் அருகில் தூக்கி போட்டுவிட்டேன். அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அது லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என்று கருதி கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக அலுவலக ஆஜரில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனி நபர்கள், புரோக்கர்களை விசாரித்து வாக்கு மூலங்களை பதிவு செய்தேன். அதேபோல், திருமதி.கவிதா அவர்களும் அவர் தரப்பு விளக்கத்தை எழுத்துமூலமாக எழுதி கொடுத்தார்கள். இதிலிருந்து திருமதி.கவிதா, துணை இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்கள் புரோக்கர்கள் மூலம் லஞ்சப்பணத்தை வசூல் செய்து, வெளியில் வரச்சொல்லி அவற்றை பெற்றுக்கொண்டு போவதை வழக்கமாக கொண்டுள்ளார் என தெரிய வருகிறது. கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் வருமாறு.

| வ.எண். | பணம் கைப்பற்றப்பட்ட நபரின் பெயர் விலாசம் | தனிநபர்/புரோக்கர்/அலுவலா | கைப்பற்றபட்ட தொகையின் விவரம் |
|---|---|---|---|
| 1. | திரு.க.அருண்குமார், வ-32, த/பெ. கமலக்கண்ணன், எண்.199/232, அண்ணாசாலை, செங்கற்பட்டு ஜ மாவட்டம். | புரோக்கர் | ரூ.28,900/- |
| 2. | திரு.S.சுரேஷ்குமார், வ-42, த/பெ. சச்சிதானந்தம், எண்.1, சரவணா தெரு, டி.நகர், சென்னை-17. | புரோக்கர் | ரூ.1,61,700/- |
| 3. | திரு.வீ.கதிரவன், வ-25, த/பெ. வீரபத்திரன், எண்.1/114, மேற்கு தெரு, அவளிக்காடு, வேதாரண்யம், நாகப்பட்டினம். | லைசென்ஸ் சர்வேயர்/ புரோக்கர் | ரூ.2,00,000/- (அலுவலகத்தில் அவரால் தூக்கி வீசப்பட்ட பணம்) |
| | | மொத்தம் | ரூ.3,90,600/- |

மேற்குறிப்பிட்ட தொகைக்கு சரியான முகாந்திரம் ஏதும் அளிக்காததால், மொத்தப்பணம் ரூ.3,90,600/-ஐ (மூன்று லட்சத்து தொன்னூறாயிரத்தி அறநூறு மட்டும்)

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

துணை இயக்குநர் திருமதி.கவிதா அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க புரோக்கர்கள் வைத்திருந்த பணம் என்பதால், அப்பணத்தை லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றினேன். மேலும், அந்த ரூபாய் நோட்டுக்கள் முறையே, 2000x4, 500x764, 200x1 & 100x4 என உள்ளது. இந்த அலுவலகத்தில் அலுவலர்களின் கையிருப்பு பதிவேடு எதுவும் பராமறிக்கப்படவில்லை. அதேபோல், கொடிநாள் வசூல் எதுவும் வசூலிப்பதில்லை என்றும் துணை இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்கள். சோதனையின்போது, கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் விவரம் வருமாறு. 1. புரோக்கர் திரு.க.அருண்குமார், வ-32, த/பெ. கமலக்கண்ணன், எண்.199/232, அண்ணாசாலை, செங்கற்பட்டு ஃ மாவட்டம் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் விவரம். அ. துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகள், முன்னிலை- திருமதி.பு.கவிதா, BE., M.Plan vide ந.க.எண்.143/2020/காஉதிகு, நாள்-27.11.2020 என்றதன்படி, பிள்ளையார்பாளையம் கிராமம், சர்வே எண்.1811/1ஏ1ஏ, 1812/1ஏ1, 1815/1ஏ1ஏ1ஏ மற்றும் 1819/1,3ஏ-னை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் தொடர்பான ஆணை, உடன் அதன் வரைபடம். ஆ. துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகள், முன்னிலை- திருமதி.பு.கவிதா, BE., M.Plan vide ந.க.எண்.1068/2020/காஉதிகு, நாள்- 20.11.2020 என்றதன்படி, கோனேரிகுப்பம் ஊராட்சி, சர்வே எண்.108/5 ஃ 6 விவசாய நிலத்தை கல்யாண மண்டபம் கட்ட வணிக உபயோகத்திற்காக திட்ட மாற்றம் கோரியது அனுகுசாலை விபரம் தொடர்பான கடிதம், இ. துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகள், முன்னிலை- திருமதி.பு.கவிதா, BE., M.Plan vide ந.க.எண்.700/2020/காஉதிகு, நாள்- 17.10.2020 என்றதன்படி, சந்தவேலூர் கிராம சர்வே எண்.177/5-ல் உள்ள 1850 ச.மீ பரப்பில் கட்டிடம் அமைக்க அனுமதி கோரியதற்கு தடையின்மைச்சான்று கோருதல் தொடர்பான கடிதம். <u>2. புரோக்கர் திரு.சுரேஷ்குமார், வ-42, த/பெ. சச்சிதானந்தம், எண்.1, சரவணா தெரு, டி.நகர், சென்னை-17.என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் விவரம்.</u> அ. துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகள், முன்னிலை- திருமதி.பு.கவிதா, BE., M.Plan vide ந.க.எண்.35/2020/காமா-2, நாள்- 06.08.2020 என்றதன்படி, வடக்குப்பட்டு கிராம 28/1பிடி ஃ 2பிடி, 31/1பி ஃ கொண்டதில் 1,48,701,76 ச.மீ பரப்பளவு மனையிடத்தில் கூடுதல் நிறுவன கட்டுமானத்திற்கு அனுமதி வழங்க Shelter Fund சசெலுத்துவதற்கான கடிதம்.ஆ. திரு.பொறி.கோ.ரா.இராதாகிருஷ்ணா, BE., M.I.E., FIWRS., உதவி செயற்பொறியாளர், நீ.ஆ.து., கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கற்பட்டு, என்பவரின் கடித எண்.1643/கோ.99/2020/நாள்-15.10.2020-ல் மகேந்திரா வேல்டு சிட்டி டெவலப்பார்ஸ் லிமிடெட் நிறுவனத்தினர் தடையில்லா சான்று கோரியது தொடர்பாக தொழற்நுட்ப அறிக்கை கடிதம்.

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....)**

இ. திரு.தி.கார்த்திகேயன், பி.எஸ்.சி., வட்டார வளர்ச்சி அலுவலர். (வ.ஊ), திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் என்பவரின் ந.க.எண்.1298/2020/அ2, நாள்-10.07.2020-ல் பாலம் அமைக்க அனுமதி கோரியது நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளித்தல் தொடர்பான கடிதம். 3. புரோக்கர் திரு.வீ.கதிரவன், வ-25, த/பெ. வீரபத்திரன், எண்.1/114, மேற்கு தெரு, அவரிக்காடு, வேதாரண்யம், நாகப்பட்டினம். என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் விவரம்.அ. திரு.எஸ்.ஆன்ட்ரூஸ், எண்.11, திருநீர்மலை மெயின் ரோடு, முதல் தளம், பம்மல், சென்னை-75 என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆன்-லைன் லே-அவுட் அப்ளிகேஷன் எண்-202001301018871, தேதி.05.11.2020 (Ref.No.8871) மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் (1 முதல் வரை பக்கங்கள் அடங்கியது).4. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் வருகைப்பதிவேடு நவம்பர்-2020-ன் நகல் 5. வருகைப்பதிவேட்டின் தொடர் குறிப்புப்பதிவேடு-2020-ன் நாள்.24.11.2020 முதல் 27.11.2020 வரை,6. Movement Register -14.09.2020 - 24.11.2020.மேற்படி கூட்டாய்வின் போது **"லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்"** என்ற அறிவிப்பு பலகை வெளிப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. தனி நபர்களை விசாரணை முடித்து, மீண்டும் விசாரணைக்கு அழைக்கும்போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டனர். பெண்களை பெண் அதிகாரிகள் வைத்து சோதனை செய்யப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 27.11.2020 தேதி இரவு 07.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு அதிகாலை 28.11.2020-ந்தேதி சுமார் 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| sdxxxxx<br>Tmt.P.Kavitha, Deputy Director, District Town & Country Planning Office, Kanchipuram. | sdxxxxx<br>Tmt.K.Saritha, Supervisor, O/o. the District Town & Country Planning Office, Kanchipuram | sdxxxxx<br>Tr.S.Vivekkumar, Draftsman-Grade-3, O/o. the District Town & Country Planning Office, Kanchipuram | sdxxxxx<br>Tr.J.Srinivasan, Draftsman-Grade-3, O/o. the District Town & Country Planning Office, Kanchipuram |
| sdxxxxx | sdxxxxx | sdxxxxx | sdxxxxx |
| Tr.N.Baskar, Draftsman-Grade-3, O/o. the District Town & Country Planning Office, Kanchipuram | Tr.K.Devaraj, Office Assistant, O/o. the District Town & Country Planning Office, Kanchipuram | Tr.K.Arunkumar, S/o. Kamalakannan. Anna Salai, Chengalpattu | Tr.S.Sureshkumar, S/o. Satchidanantham., No.1. Saravana Street, T.Nagar, Chennai-17. |
| sdxxxxx | sdxxxxx | sdxxxxx | sdxxxxx |
| Tr.V.Kadhiravan, S/o. Veerapathiran, No/1/114, Mela street, Avirikadu, Vedharanyam, Nagapattinam. | Tr.G.Annadurai, Inspector of Police, V&AC, Kanchipuram. | Tmt.G.S.Tamizharasi, Inspector of Police, V&AC, Kanchipuram | Tmt.R.Geetha, Inspector of Police, V&AC, Kanchipuram |

**Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2020/KM, U/s. 102 Cr.P.C. r/w. 7 of The Prevention of Corruption Amendment Act-2018, Continuous.....**

| sdxxxxx | | | Sdxxxxx |
|---|---|---|---|
| Tr.K.V.Kalaiselvam, DSP, V&AC, Kanchipuram. | | | Tmt.J.Yogajothi, Special Deputy Collector (SSS), KPM & District Inspection Cell Officer (I/C), Kanchipuram, Thiruvallur & Chengalpattu at Kanchipuram Collectorate. |

**Hon'ble Madam,**

On endorsement of DSP, VAC, KPM, I received this complaint and registered a case in Kanchipuram V&AC, Cr.No.08/AC/2020/KM, u/s. 102 Cr.P.C and 7 of The Prevention of Corruption Amendment Act-2018 on 28.11.2020 at 04.30 hrs.

The original FIR along with complaint enclosed with the Proceedings of Additional in-chage District Inspection Cell Officer Tmt.J.Yogajothi, connected documents and seized amount Rs.3,90,600/- (Un-accounted money) during the Surprise Check are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpattu and the other copies are submitted to Superior Officers concerned.

K. [signature]
28/11/2020.